# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE (ECHO GROUP)

*India's National Spiritual Newspaper*

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAANS

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Tamil | ₹ 10/-

Vol. XXVI | YEAR OF OUR LORD JESUS CHRIST, APRIL 2021 | No. 5


## பரிசுத்த வேதாகமம்



இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்.

**நீதிமொழிகள் 19:1-10**

1. மாறுபாடான உதடுகளுள்ள மூடனைப்பார்க்கிலும், உத்தமனாய் நடக்கிற தரித்திரனே வாசி.

2. ஆத்துமா அறிவில்லாமலிருப்பது நல்லதல்ல; கால் துரிதமானவன் தப்பி நடக்கிறான்.

3. மனுஷனுடைய மதியீனம் அவன் வழியைத் தாறுமாறாக்கும்; என்றாலும் அவன் மனம் **கர்த்தருக்கு** விரோதமாய்த் தாங்கலடையும்.

4. செல்வம் அநேக சிநேகிதரைச் சேர்க்கும்; தரித்திரனோ தன் சிநேகிதனாலும் நெகிழப்படுவான்.

5. பொய்ச்சாட்சிக்காரன் ஆக்கினைக்குத் தப்பான்; பொய்களைப் பேசுகிறவனும் தப்புவதில்லை.

6. பிரபுவின் தயையை அநேகர் வருந்திக் கேட்பார்கள்; கொடைகொடுக்கிறவனுக்கு எவனும் சிநேகிதன்.

7. தரித்தரனை அவனுடைய சகோதரர் எல்லாரும் பகைக்கிறார்களே, எத்தனை அதிகமாய் அவன் சிநேகிதர் அவனுக்குத் தூரமாவார்கள்; அவர்களுடைய வார்த்தைகளை அவன் நாடுகிறான், அவைகளோ வெறும் வார்த்தைகளே.

8. ஞானத்தைப் பெற்றுக்கொள்ளுகிறவன் தன் ஆத்துமாவைச் சிநேகிக்கிறான்; புத்தியைக் காக்கிறவன் நன்மையடைவான்.

9. பொய்ச்சாட்சிக்காரன் ஆக்கினைக்குத் தப்பான்; பொய்களைப் பேசுகிறவன் நாசமடைவான்.

10. மூடனுக்குச் செல்வம் தகாது; பிரபுக்களை ஆண்டுகொள்வது அடிமைக்கு எவ்வளவும் தகாது.

# பாவத்தின் வல்லமையிலிருந்து
# பரிபூரண வெற்றி!



போதகர் டேவிட் வில்கெர்ஸன்

ஒரு முழுவாக்கியத்தில் தேவனின் புதிய உடன்படிக்கையை நாம் சுருக்கிக் கூறமுடியும். பாவத்தின் ஆதிக்கத்திலிருந்து நம்மை விடுவிக்க மறுக்க முடியாத வாக்குறுதியைத் தேவன் தந்துள்ளார். பரிசுத்த ஆவியின் வல்லமையின் மூலம் இது சாத்தியமாகும்.

நமது மாம்ச முயற்சியினால் தேவனைப் பிரியப்படுத்தும் எல்லா பிரயத்தனங்களையும் புதிய உடன்படிக்கை தேவையற்றதாக மாற்றிவிட்டது. தேவனின் புதிய உடன்படிக்கை நம்மிலே இருந்த பாரத்தை எடுத்துவிட்டு, பிதாவின் மேல், அந்த பாரத்தைப் போட்டுவிட்டது.

இந்த உடன்படிக்கை மூலம் தேவன் கூறுகிறார், "உங்களால் உருவாக்கப்பட்ட இருதயத்தை நான் இனி கேட்கமாட்டேன்;" மாறாக, "உங்கள் கல்லான இருதயத்தை மாற்றி, உங்களிலே என்னை விரும்புகிற புதிய இருதயத்தை வைப்பேன்". "பரிசுத்த ஆவியின் வல்லமையாலே எனக்குப் பிரியமானவற்றை விரும்பவும் செய்யவும் செய்வேன்".

எளியமுறையில் கூறுவதென்றால், 'என்னால் முடியும்' எனக்கூறும் மனிதனின் கூற்றுக்கு முடிவை புதிய உடன்படிக்கை கொண்டு வருகிறது. "என்னால் எல்லாம் கூடும். நான் போதிய அளவு வேத ஆராய்ச்சியிலும், ஜெபத்திலும் செலவிட்டால், என்னுடைய வாழ்விலே விந்தை மாற்றங்களைக் கொண்டு வர முடியும்" என்று நம்முள்ளிருக்கும் மனிதன் கூறுகின்றான்.

'என்னால் கூடும்' என்று கூறுகிற பழைய மனிதனுக்கு தேவனின் புதிய உடன்படிக்கை அது முடியாது எனக் கூறுகிறது. "என்னுடைய சுயபெலத்தாலே, என்னால் எதுவும் செய்யமுடியாது. ஆனால் பரிசுத்த ஆவியானவரின் துணை கொண்டு எல்லாம் செய்ய முடியும்" என்ற எண்ணத்தை அது அறிமுகப்படுத்துகின்றது.

கடைசி நாட்களில் ஜெயங் கொள்ளும் வாழ்க்கையை நடத்த உதவும் இரகசியத்தை நமக்கு அறிவிப்பது புதிய உடன்படிக்கை என நான் எனது ஆராய்ச்சியின் மூலம் கண்டுகொண்டேன். கிறிஸ்துவின் வருகை சமீபித்து வருகையிலே, கர்த்தரின் ஜனத்திற்கு விரோதமாக சாத்தானானவன், அந்தகார சக்திகளை அவிழ்த்துவிடப் போகிறான். இது வரைக்கும் உலகம் காணாத வகையிலே கொடியோனின் சக்தி நம்மீது கட்டவிழ்த்து விடப்படும்.

இது திருச்சபையின் சுவர்களுக்குள் ஏற்கெனவே நடப்பதை நாம்

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

(ECHO GROUP)



## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...

*"உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்"* (உபாகமம் 28:1)



**நமது செயல் திட்டம்**

பூர்வகால மற்றும் ஆதி அப்போஸ்தல உபதேசங்களை அவற்றின் சாரம் சற்றேனும் குன்றாமல் இப்புதிய தலைமுறையினருக்கு எடுத்து இயம்ப வேண்டும்! இதுவே இன்றையத் தேவை !!


**CHIEF EDITORS**

Pastor S. Sam Selva Raj
Angeline Selvakumari Henry, M.A., M.Ed.

**MANAGING EDITOR**

Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**ADMINISTRATION**

Bro. N. Prakasam, M.A., General Manger

**EDITORIAL BOARD**

Sis. Jesy Veena Sam
Bro. M. Paul Raj, M.A., B.Ed.
Sis. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.

**HEAD OFFICE CO-ORDINATORS**

Bro. John Rodrigues
Sis. E. Daisy Rani

**ADVISORY BOARD**

Adv. Jose Abraham
Adv. N. Balaji, B.Com., B.L.
Dr. S. Rabinder Boaz, M.S.
Er. C.G.S. Babu Rao, B.Tech., M.Tech (DM)
Aud. K. Puratchivendan, M.Com., B.L.



**PUBLISHER & PRINTER**

Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 95661 31858
E-mail : sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**Websites :**
www.echoofhiscall.org
www.echoofhiscall.com


### கர்த்தருக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே,

**நமது ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சிறப்பான வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.**

நமது ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் கிருபையால் நீங்களும், உங்களுக்கு அன்பானவர்களும் நலமாயிருக்கிறீர்கள் என்று நம்புகிறோம்.

சென்னை நகரத்திலும், வெளியிலும் பல ஊழியங்களை கடந்த மாதத்தில் செய்ய தேவன் எங்களுக்கு உதவி அந்த மாதத்தை எங்களுக்கு ஆசீர்வாதமாக்கித் தந்தார். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் நமது ஆலயத்தில் மூன்று ஆராதனைகள் நடத்தும்படியாக மாற்றியுள்ளோம். காலை 8 மணி, காலை 10.30 மணி, மாலை 6 மணி. நான் காலை 8 மணி ஆராதனையில் தேவ செய்தி கொடுக்கிறேன். பாஸ்டர் அலெக்ஸ் சாம்சன் 10.30 மணி ஆராதனையில் தேவ செய்தி கொடுக்கிறார். மாலை 6 மணி ஆராதனையில் சபையின் தலைவர்கள் தேவ செய்தியைக் கொடுக்கிறார்கள். மருத்துவமனை ஊழியக் குழுவினர் ஒவ்வொரு ஞாயிறும் கூடி வந்து மருத்துவமனைகளுக்கு சென்று வியாதியஸ்தர்களுக்கு ஜெபம் பண்ணும் ஊழியத்தின் வாசல் திறக்கப்பட வேண்டும் என்று ஜெபித்து வருகிறார்கள்.

நமது சபை பெண்கள் கூடுகை, ஆண்கள் கூடுகை, ஊழியர் கூடுகை எப்போதும் போல நடந்து வருகின்றன. சிறுவர் ஊழியங்கள் தொடங்கவிருக்கின்றன. வாலிப சகோதர, சகோதரிகளை வழிநடத்த புதிய தலைவர்களை நியமித்திருக்கிறோம்.

நமது கிளைச்சபைகள் எப்போதும் போல இயங்கி வருகின்றன. நமது அனைத்து பணியாளர்களும் புதுப்பிக்கப்பட்ட மனதோடும், அர்ப்பணிப்போடும் கடினமாக உழைத்து வருகின்றனர்.

COVID-19 காரணமாக நடத்தி முடிக்கப்படாத பாடங்கள் நமது வேதாகமக் கல்லூரியில் உண்டு. அவற்றை விரைவாக நடத்த சில ஏற்பாடுகளை செய்துள்ளோம். 2019-2020க்கான பட்டமளிப்பு விழாவை 2021 ஆம் ஆண்டு, மே மாதம் 22ம் தேதியில் நடத்த உள்ளோம். நமது தொலைதூர பாடங்கள் நன்றாக நடந்து வருகின்றன.

கர்த்தருக்குச் சித்தமானால், இவ்வருடம் ஜூன் மாதம் 1ம் தேதி அன்று நமது நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் தொடங்க இருக்கின்றன. கீழ்க்காணும் கல்லூரிகளில் பயில அர்ப்பணிப்புள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று வருகிறோம்.

1. ஹிந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் பயிற்றுவிக்கப்படும், தங்கும் வசதியுடன் கூடிய நமது வேளச்சேரி கல்லூரி.
2. நமது தலைமைச் சபை வளாகத்தில் தமிழ் மொழியில் பயிற்றுவிக்கப்படும் மாலை நேரக் கல்லூரி.
3. சென்னை தாம்பரத்திற்கடுத்த சந்தோஷபுரம் என்ற பகுதியில் இயங்கி வரும் நமது பள்ளி வளாகத்தில் தமிழில் நடைபெறும் மாலை நேரக் கல்லூரி. தகுதியான மாணவர் பட்டியலை விரைவாக ஆயத்தம் பண்ணவிருக்கிறோம்.

அர்ப்பணிப்பும் தகுதியுமுள்ள நபர்களை நீங்கள் அறிவீர்களானால், நமது கல்லூரிகளில் படிக்க வழிநடத்துங்கள். மிகக்குறைவான கட்டணமே வசூலிக்கப்படுகிறது. பாடக் குறிப்புகள் இலவசமாகவே அளிக்கப்படுகிறது. இந்தியாவிலும், அண்டை நாடுகளிலும் சுவிஷேத்தைக் கொண்டு செல்லும் சுவிசேஷகர்கள் பலரை நாங்கள் உருவாக்க வேண்டும் என்பதே எங்கள் தரிசனம். இந்த மிகப்பெரிய வேலையில் ஜெபத்தின் மூலமாகவும், உதவிகள் செய்வதன் மூலமாகவும் நீங்களும் எங்களுடன் இணைய எதிர்பார்க்கிறோம்.

நமது **அழைப்பின் எதிரொலி** மாதாந்திர பத்திரிகையின் இணை


**Our Ministries:** ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) ✿ BIBLECOR - Postal Courses (3 languages) ✿ Theological Correspondence Courses (2 languages) ✿ Church Planting ✿ Nehemiah Bible Colleges ✿ Gospel Printing Press ✿ Great Commission Partners ✿ St. Paul's Matriculation School ✿ Crusades ✿ Community Development

ஆசிரியர்களுக்காக உங்கள் ஜெபங்களை எதிர்பார்க்கிறோம். அவர்கள் குறிக்கப்பட்ட நேரத்திற்குள்ளாய் ஒவ்வொரு மாதமும் மொழிபெயர்ப்பு செய்து வருகிறார்கள். நமது அச்சகப் பணியாளர்களும் 17 மொழிகளில் வெளியாகும் நமது பத்திரிகையை வெளியிட மிகக் கடினமாக உழைத்து வருகிறார்கள்.

நமது **St. Paul's மெட்ரிகுலேஷன் பள்ளியில்,** தற்போது அரசாங்க விதிகளின்படி உயர் வகுப்புகள் மட்டும் நடந்து வருகின்றன. அங்கு நடைபெறவிருந்த கட்டிட பழுது பார்க்கும் பணியும், புதிய கட்டிடம் கட்டும் பணியும் போதுமான நிதி இல்லாததால் தடைபட்டுள்ளது.

இந்தக் கடினமான நாட்களில் கூட, சுவிசேஷத்தை இந்தியா விலும், வெளிநாடுகளிலும் அறிவிக்க தேவன் எங்களை பலவிதங்களில் பயன்படுத்தி வருவதால் நாங்கள் சந்தோஷமடைகிறோம். அச்சடிப்ப தற்குத் தேவையான தாள்கள், மை போன்ற பொருட்களின் விலை கூடிக் கொண்டே வருகிறது. நமது எல்லாவித ஊழியங்களையும் நடத்த நிரந்தர வருமானங்கள் நமக்கு இல்லாமல், விசுவாசத்தில்தான் ஒவ்வொரு நாளும் ஊழியங்களை நடத்தி வருகிறோம். அதனால் பல நேரங்களில் பொருளாதார தாக்கத்தால் நெருக்கப்படுகிறோம். எனவே எங்கள் பங்காளராகிய நீங்கள், எங்களை உங்கள் ஊழியர்களாகவும் கர்த்தருடைய தோட்டத்தில் உடன் வேலையாட்களாகவும் கருதி, எங்களுக்காக ஜெபியுங்கள். மற்றும் ஒரு சிறு காணிக்கையாகிலும் ஒவ்வொரு மாதமும் அனுப்பி எங்களுக்கு பொருளாதார நிலையில் உதவியாயிருங்கள் என்று கேட்டுக்கொள்கிறோம். இயேசு கிறிஸ்துவை அறியாத மக்களை இந்த ஊழியங்கள் மூலம் பரலோகம் சென்றடைய உங்கள் உதவிகள் உதவியாக இருக்கும். தேவன் அதற்கான பிரதிபலனை நிச்சயமாக உங்களுக்கு அருள்வார்.

உலகெங்கிலுமுள்ள பல மொழிகளைப் பேசும் பல மக்களிடமிருந்து எங்களுக்கு ஜெப விண்ணப்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன. உங்களை நாங்கள் அதிகமாய் நேசிப்பதினால் உங்களுக்காக தினமும் ஜெபிக்கிறோம்.

இந்த நீண்ட கடிதத்தை வாசித்தமைக்கு மிக்க நன்றி!

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.**

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,

**பாஸ்டர் எஸ். சாம் செல்வ ராஜ் & அலெக்ஸ் சாம்சன் சாம்.**

---

.... 1-ம் பக்கத் தொடர்ச்சி

பார்த்திருக்கின்றோம். சிறிய பொய்கள், தவறான கொள்கைகள், சாத்தானின் போதனைகள் போன்றவற்றின் மூலம் சாத்தான் திருச்சபைக்குள் புகுந்துவிட்டான். இதை உணராது, அநேக கிறிஸ்தவர்கள் காணப்படுகின்றனர். இப்படிப்பட்ட காலத்தில், எப்படி விசுவாசிகள் நிலைநிற்க முடியும்? என நான் கேட்கிறேன்.

இந்தப் பிரச்சனையைத் தன் மீது ஏற்றுக்கொள்வதாகக் கூறி, தேவன் பதிலளிக்கின்றார். "நீங்கள் பயப்பட வேண்டாம். என்னுடைய கரத்திலே இந்தப் பிரச்சினையை எடுக்கின்றேன். சத்துருவின் எல்லா முயற்சிகளையும் தோல்வியுறச் செய்ய நான் உங்களைப் பெலப்படுத்துவேன். என்னுடைய புதிய உடன்படிக்கை மூலம் இதைச் செய்வேன்" என உறுதிபடக் கூறியுள்ளார். புதிய உடன்படிக்கையைக் குறித்து நான் ஆராய்ந்தபோது, இஸ்ரவேலரோடு செய்யப்பட்ட பழைய உடன்படிக்கையிலிருந்து பல சத்தியங்கள் வெளிப்படுவதைப் பார்த்தேன். பவுல் கூறுகிறார். "இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது" (1 கொரிந்தியர் 10:11). வெற்றியின் திறவுகோல் எது என அறிய விரும்புகிறாயா? எப்படி பாவத்தையும், மாம்சத்தையும், சாத்தானையும் வெற்றி கொள்ள முடியும் என்பதை அறிய விரும்புகிறாயா? சத்துருவோடு எப்படி போராட வேண்டுமென அறிய விரும்புகிறாயா? அப்படியென்றால் பழைய ஏற்பாட்டிற்குச் செல் என தேவன் என்னைப் பார்த்துக் கூறினார். அங்குக் காணப்படும் எடுத்துக்காட்டுகள் மூலம் நீ இவைகளை அறிந்து கொள்வாய். இவையெல்லா வற்றையும் உனக்காகவே நான் எழுதி பாதுகாத்து வைத்துள்ளேன் என்றார்.

**பழைய ஏற்பாட்டிலிருந்து நாம் கற்கும் முதல் பாடம் என்னவென்றால், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மீது விசுவாசம் வைக்கின்ற வேளையில் தேவனுடைய பிள்ளை எவ்வளவு பாதுகாப்பாயிருக்கிறான் என்பதே நாம் அறிந்து கொள்வதாகும்**

முதல் பஸ்கா பண்டிகை இரவிலே எகிப்தில் வாழ்ந்த ஒரு இஸ்ரவேலனும் கூட சங்கார தூதனால் தாக்கப்படும் அபாயத்தில் காணப்படவில்லை. அவர்கள் தங்கள் கதவு நிலைக்கால்களின் மீது பூசிய இரத்தத்தின் மூலமாக தேவனின் பாதுகாப்பிலே பாதுகாப்பாக இருந்தனர். பழைய ஏற்பாட்டிலே கூறப்பட்டுள்ள இந்தப் பாதுகாப்பு மக்கள் மீது தெளிக்கப்படும் இரத்தத்தைக் கூறுகிறது. கிறிஸ்தவர் களாகிய நாம் இயேசுவின் இரத்தத்தை விசுவாசித்து, நம்பி அதனை, நமது இதய வாசல் நிலைக்கால்களில் பூசியவர் களாயிருக்க வேண்டும்.

அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் மீது, இஸ்ரவேலர் கொண்டிருந்த விசுவாசம், அவர்கள் வாழ்க்கையில் பல காரியங்களைக் கொண்டு வந்தது. அது அவர்களை சங்கார தூதனிடமிருந்து காப்பாற்றமட்டுமல்ல. அவர்களை எகிப்திலிருந்து வெளியே கொண்டு வந்து, பார்வோனின் கைக்கும் அவர்களைத் தப்புவித்தது. இருந்தாலும் இஸ்ரவேலர் மேற்கொள்ள வேண்டிய பிரச்சினைகள் இன்னும் இருந்தன. அதேபோல, இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் மீது நமக்கிருக்கும் நம்பிக்கை நமது இரட்சிப்புக்காக மாத்திரம் அல்ல. சாத்தானின் எல்லாக் கோட்டைகளிலிருந்தும் விடுதலை பெறவும் உதவுகிறது.

என்னை தயவுகூர்ந்து தவறாக புரிந்துகொள்ளாதீர். நீங்கள் இரட்சிக்கப்பட்டால் கிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவங்கள் மூடப்பட்டு வாழுதல் மிகவும் அற்புதமானது. ஆனால் உன் உள்ளத்திலே பாவத்தின் வல்லமையோடு நீ செய்யும் போராட்டம், உனது கொடிய பழக்கத்தை மேற்கொள்ள எடுக்கும் முயற்சி, எப்படி முடிவுக்குக் கொண்டுவரமுடியும்? உன் ஆத்துமாவோடு போராடும் போராட்டங்களை மேற்கொள்ள உன்னிடம் என்ன வல்லமை காணப்படுகின்றது? ஆனால் உண்மை யென்னவென்றால், கிறிஸ்துவின் இரத்தத்தாலே நாம் இரட்சிக்கப் பட்டிருந்தாலும், துரைத்தனங்களோடும், பிசாசின் சக்திகளோடும், கோட்டை களோடும், நாம் போரிட வேண்டியுள்ளது. புதிய உடன்படிக்கையினாலே நமக்கு வரும் வல்லமையை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த வல்லமை

விசுவாசத்தின் மூலம் மாத்திரம் வருகிறது.

### இரத்தத்தினால் மீட்கப்பட்ட இஸ்ரவேல் மக்களுக்கு ஏசாயா வல்லமையாக செய்தியை அளித்தார்

தங்கள் சுயபெலத்தால், இஸ்ரவேலர் அசீரியரோடு வெற்றி பெற வாய்ப்பே இல்லையென ஏசாயா தீர்க்கதரிசி, இஸ்ரவேலரை எச்சரித்தார். ஏசாயா 31 இதனை முழுமையாக சித்தரிக்கின்றது. இந்த அதிகாரம் நாம் இச்சையோடும், கெட்ட பழக்கவழக்கத் தோடும் சூழ்ந்துள்ள பாவத்தோடும், செய்ய வேண்டிய யுத்தத்திற்கு நிழலாயிருக்கிறது.

ஏசாயா இந்தத் தீர்க்கதரிசனத்தை எழுதிய நாட்களில், அசீரிய மன்னனாகிய சால்மனேசரும், அவனது படையும் யூதாவுக்கு விரோதமாக படையெடுத்து வந்தது. யூதாவிலே பல நகரங்களைக் கைப்பற்றிய அசீரியப்படை, எருசலேமையும் கைப்பற்றத் திட்டம் தீட்டிக்கொண்டிருந்தது. செனகரீப் என்றால், எபிரேயத்தில் **"வெற்றி"** என்பது பொருள், அசீரியா என்றால், **"பெருகி வரும் பாவம்"** என்பது பொருள். இதனை இணைத்துப் பொருள் கொண்டால் பொல்லாத விரோதி தேவனின் மக்களோடு வெற்றி கொள்கிறான் எனக் கொள்ளலாம்.

அசீரியா, நமக்கு விரோதமாக எழும் ஒவ்வொரு பாவமும் சாத்தானது இச்சையின் ஆவியை குறிப்பதாக அமைந்துள்ளது. செனகரீப் ஒரு சாத்தான். திருச்சபைக்கு விரோதமாக எவ்விதம் சாத்தான் சோதனைகளைக் கொண்டு வருகிறான் என்பதை இந்த அதிகாரம் தெளிவாக நமக்கு அறிவிக்கின்றது. மிகுந்த பெலத்தோடும், வெற்றியோடும் சாத்தான் செயல்படுகிறான்.

கடைசி நாட்களில் எப்படி பாவம் பெருகும் என்பதனை நமக்கு நன்கு விளக்கும் அதிகாரமாகவும் இது காணப்படுகிறது. சபைகளில் ஏமாற்றுகிறவர்களும், சாத்தானின் போதனைகளை சுமந்து வருகின்ற வர்களும் அதிகரிப்பார்களென நாம் வாசிக்கின்றோம். சாத்தான் எல்லா தகவல் பரிமாற்றங்களையும், யுத்திகளையும் இன்று ஆக்கிரமித்துள்ளான். பால் உணர்வைத் தூண்டுகிற நிர்வாணப் படங்கள் கலாச்சாரம் நாளுக்கு நாள் பெருகி வருகின்றது. (வெளிப்படுத்தல் 12:15)ல் வாசிக்கின்ற வண்ணம் **"... பாம்பானது தன் வாயிலிருந்து ஒரு நதி போன்ற வெள்ளத்தை அவளுக்கு பின்னாக ஊற்றிவிட்டது"**.

அசீரியர்கள் யூதாவைத் தாக்கியபோது, எசேக்கியா, யூதாவில் இராஜாவாகயிருந்தார். பெருந்திரளான அசீரியப்படை எருசலேமைச் சூழ்ந்து கொண்ட போது, "என்னால் முடியாது" என்ற எண்ணம் அவனுக்குள் வந்தது. சில வெளிநாடுகளின் துணையோடு, அந்த மோசமான நிலையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளலாம் என இஸ்ரவேலர் நினைத்தனர்.

எனவே, எசேக்கியா, பொன், வெள்ளி போன்ற வெகுமதிகளோடு, தூதுவர்களை எகிப்திற்கு, உதவி கோரி அனுப்பினார். எகிப்தின் குதிரை, இரதம், காலாட்படை போன்றவற்றின் உதவியுடன் அசீரியரை துரத்திவிடலாம் என அவன் எண்ணினான்.

இந்தச் சூழ்நிலையில் இஸ்ரவேலருக்குப் போதுமான விசுவாசம் இல்லாமற் போயிற்று என நீங்கள் நினைக்கலாம். ஆனால் தேவன் இதனை அவருக்கு விரோதமாக செய்த கலகம் எனக் கருதினார். (ஏசாயா 31:1)ல் "சகாயமடையும்படி இஸ்ரவேலுடைய பரிசுத்தரை நோக்காமலும், கர்த்தரைத் தேடாமலும், எகிப்துக்குப் போய், குதிரைகள்மேல் நம்பிக்கை வைத்து, இரதங்கள் அநேகமாயிருப்பதினால் அவர்களை நாடி, குதிரைவீரர் மகாபெலசாலிகளாயிருப் பதினால் அவர்களை நம்பிக் கொண்டிருக் கிறவர்களுக்கு ஐயோ!" என கர்த்தர் சொல்லுகிறார். "நீங்கள் எனக்கு விரோதமாக கலகம் செய்தீர்கள். என்னால் மாத்திரம் உங்களுக்கு ஜெயம் தர முடியும் என்று உங்களுக்குத் தெரியும்; என்றாலும் நீங்கள் என்னிடமாய்த் திரும்பவில்லை. மேலும் தனது மாம்சத்தின் மீது நம்பிக்கை வைக்கிற மனிதனைக் குறித்து ஏசாயா 31:3ல், எகிப்தியர் தெய்வம் அல்ல. மனுஷர்தானே; அவர்களுடைய குதிரைகள் ஆவியல்ல, மாம்சந்தானே; கர்த்தர் தமது கரத்தை நீட்டுவார். அப்பொழுது சகாயம் செய்கிறவனும் இடறி, சகாயம் பெறுகிறவனும் விழுந்து, அனைவரும் ஏகமாய் அழிந்து போவார்கள் எனக் கூறுகிறார். உங்கள் சுய சக்தியால் உங்களை விடுவித்துக்கொள்ள முடியும் என நீங்கள் நினைக்கின்றீர்கள். உங்கள் பெலத்தால், ஞானத்தால், திறமையால் வெற்றி கொள்ள முடியும் என எண்ணுகின்றீர்கள். நீங்கள் கர்த்தரிடத்தில் இப்போது திரும்புங்கள். அவர் மாத்திரமே உங்கள் விடுதலைக்கான நம்பிக்கை.

### இன்று திருச்சபை, எகிப்திய இரதங்களைப் போன்ற பல காரியங்களைக் கொண்டிருக்கிறது

மாம்சத்தின் மீது வெற்றிபெற, இஸ்ரவேலரைப் போல பல கிறிஸ்தவர்கள் மனிதனை தேடிச் செல்கின்றார்கள். கிறிஸ்தவ நூலகங்களிலே இன்று ஏராளமான, தமக்குத் தாமே உதவுகிற பல நூல்கள் நிறைந்து காணப்படுவது இதற்குச் சான்று, ஆயிரக்கணக்கான நூல்கள், நமது மாம்சத்தை திருப்திப்படுத்தவும், அடக்கவும், உறுதிதரக்கூடியனவாகக் காணப்படுகிறது. எங்கு பார்த்தாலும், நமது தேவைக்கு மாம்சரீதியில் பல வழிமுறைகள் சொல்லப்படுகின்றன. நமது எல்லா ஆவிக்குரிய தேவைகளும், ஜெபத்தினாலும், தொழுதலினாலும் நடைபெறுமென பல உயிர்மீட்சிக் கூட்டங்களை நடத்துகின்ற சபைகள் கூறிவருகின்றன. பல சுவிசேஷகர்கள், உடனடி விடுதலை, உடனடி சுகம், உடனடி தேவனுடைய வார்த்தை, என வழங்கி வருகின்றனர்.

உண்மையென்னவென்றால், இஸ்ரவேலருக்குத் தேவன் தம்மை அல்லது மாம்சத்தைத் தெரிந்துகொள்ளும் உரிமையைக் கொடுத்தார். ஆனால், உங்கள் எந்த முயற்சியும் வெற்றி தராது.

மார்ஷல் ஆப்பிள்ஒயிட் என்று அழைக்கப்பட்ட **மார்ச் 1997**ல் கும்பலாக

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....

**ECHO OF HIS CALL**
CHENNAI.

**HON. CO-ORDINATORS WANTED**

Thousands of friends like you are being blessed by reading **Echo of His Call** in 17 languages throughout the world. Now we need **Honorary Co-ordinators** in your language to evaluate the standard of messages published in Echo of His Call and give suggestions to improve each month.

Please contact: **Pr. S. Sam Selva Raj,**
**Cell : 98412 71858 / 98410 71858**
**E.Mail : sam@echoofhiscall.org**

GREAT COMMISSION PARTNERS
ECHO OF HIS CALL MINISTRIES
SINCE 1969

# பிரதானக் கட்டளைப் பங்காளர் – துதி மற்றும் ஜெப குறிப்புகள்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS



### 2021 ஏப்ரல் 19 முதல் 2021 மே 18 வரை

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

**ஏப்ரல் 19 :** கடந்த மாதத்தில் நமது **அழைப்பின் எதிரொலி**யின் 17 மொழிகளின் பிரசுரங்களையும் மற்றும் சுவிசேஷ அச்சகத்தையும் கர்த்தர் ஆசீர்வதித்தார்.

**ஏப்ரல் 20 :** நமது **St. பால்ஸ் மெட்ரிகுலேஷன்** பள்ளியின் இணைய வழி வகுப்புகளை ஆசீர்வதித்து வருவதற்காக நன்றியோடு துதிப்போம்.

**ஏப்ரல் 21 :** நமது St. **பால்ஸ் மெட்ரிகுலேஷன்** பள்ளிக்கு புதிய முதல்வரை கொடுத்ததற்காக கர்த்தரைத் துதிப்போம்.

**ஏப்ரல் 22 :** நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும், அவர்களது குடும்பத்தினர் அனைவருக்காகவும் நன்றியோடு கர்த்தரைத் துதிப்போம்.

**ஏப்ரல் 23 :** நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள், மற்றும் பிரதான கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்தார்.

**ஏப்ரல் 24 :** நமது அனைத்து மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தாருக்காக கர்த்தரைத் துதிப்போம்.

**ஏப்ரல் 25 :** நமது ஊழியப்பிரயாணங்களை ஆசீர்வதித்ததிற்காக நன்றியோடு கர்த்தரைத் துதிப்போம்.

**ஏப்ரல் 26 :** நமது தலைமைச் சபையில் ஆராதனைகள் மீண்டும் தொடர்ந்து நடைபெற்றுவருவதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிப்போம்.

**ஏப்ரல் 27 :** Covid-19 மத்தியிலும் நமது **அழைப்பின் எதிரொலி** ஊழியங்கள் மற்றும் சுவிசேஷ அச்சகத்தைச் சார்ந்த அனைத்து ஊழியங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார், கர்த்தரைத் துதிப்போம்.

**ஏப்ரல் 28 :** நமது வேதாகமத் தபால்வழிக் கல்வி மற்றும் அஞ்சல்வழி இறையியல் கல்விகளை **(BIBLECOR / TCC)** ஆசீர்வதித்து வரும் கர்த்தரைத் துதிப்போம்.

**ஏப்ரல் 29 :** புதிய விசுவாச ஊழியர்களைத் தந்து நமது **அழைப்பின் எதிரொலி**யை ஆசீர்வதித்ததற்காக கர்த்தரைத் துதிப்போம்.

**ஏப்ரல் 30 :** முழுமனதோடு உழைக்கும் நமது **St. பால்ஸ் மெட்ரிகுலேஷன்** பள்ளியின் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்காக நன்றியோடு கர்த்தரைத் துதிப்போம்.

**மே 01 :** நமது கிளைச் சபைகளை கர்த்தர் ஆசீர்வதித்தார்; கர்த்தரைத் துதிப்போம்.

**மே 02 :** பெரிய அளவிலான பாதுகாப்போடு நமது சுவிசேஷ செயல்பாடுகளை 2020ம் வருடம், இந்த Covid-19 மத்தியிலும் கர்த்தர் ஆசீர்வதித்தார்.

**மே 03 :** நமது தலைமைப்போதகர் **எஸ். சாம் செல்வ ராஜ்** அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய வல்லமைகளிலிருந்தும் பாதுகாத்து வருகிறார்.

**மே 04 :** நமது மராத்தி மொழியின் இணை ஆசிரியர் Rev. சசி திவாரி (Rev. Sashi Tiwari) விரைவில் பூரண சுகம் பெறவேண்டி கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்.

**மே 05 :** நமது வடஇந்திய ஊழியர்களுக்காகவும் மற்றும் அவர்களது சுக வாழ்வுக்காகவும் கர்த்தரிடத்தில் ஜெபிப்போம்.

**மே 06 :** நமது நிறுவனத்திற்காகவும், நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்காகவும் மற்றும் அவர்களது குடும்பத்திற்காகவும் ஜெபிப்போம்.

**மே 07 :** உலகிலுள்ள நாடுகள் அனைத்திற்குள்ளாக சமரசம் நிலவிட ஜெபிப்போம்.

**மே 08 :** நமது சுவிசேஷ அச்சகம் சிறப்பாக செயல்பட வேண்டி ஜெபிப்போம்.

**மே 09 :** எல்லாவிதமான ஊழியர்களும் மற்றும் விசுவாசிகளும் ஒருங்கிணைந்து ஊழியப்பணிகளை செயல்படுத்த வேண்டி ஜெபிப்போம்.

**மே 10 :** நமது நெகேமியா வேதாகமக்கல்லூரிகள் ஜீன் 1, 2021 முதல் திரும்ப செயல்பட கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்.

**மே 11 :** நமது **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களின் வளர்ச்சிக்காக கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்.

**மே 12 :** போதைப்பழக்கத்திற்கு அடிமையானவர்களின் மீட்புக்காக கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்.

**மே 13 :** இவ்வருடத்திற்கான நம்முடைய செலவுகளுக்காகவும், கர்த்தருடைய அன்பின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிப்போம்.

**மே 14 :** கர்த்தரிடம், நமது **ஆங்கில இணையாசிரியர் சகோ. M. பால்ராஜ்** அவர்களின் சுகவாழ்வுக்காகவும், நோயின் பாதிப்பிலிருந்து விடுதலை பெறவும் ஜெபிப்போம்.

**மே 15 :** நமது சுவிசேஷ அச்சகப் பாதுகாப்பிற்காகவும், நேர்த்தியாக வேலை நடப்பதற்காகவும் ஜெபிப்போம்.

**மே 16 :** நமது **மணிப்பூரி மொழியின் இணை ஆசிரியர்** Rev. Dr. **ரிஷிகாந்தா சொரோகாய்பம்** மற்றும் அவரது குடும்பத்தினரின் மேலான வாழ்வுக்காக கர்த்தரிடம் ஜெபிப்போம்.

**மே 17 :** கொரோனா வைரஸ் இவ்வுலகைவிட்டு முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டி மிகுந்த ஊக்கமாக ஜெபிப்போம்.

**மே 18 :** நமது தலைமைப்போதகர் **எஸ். சாம் செல்வ ராஜ்** அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய வல்லமைகளிலிருந்தும் தொடர்ந்து பாதுகாக்க தேவனிடத்தில் ஜெபிப்போம்.

.... 4-ம் பக்கத் தொடர்ச்சி

தற்கொலை செய்துகொண்ட, "பரலோக வாசல்" என்ற மார்க்கத்தின் தலைவர், ஒரு உன்னத வாழ்வுக்கு செல்வார் என எதிர்பார்க்கப்பட்டது. ஏன் இப்படிப்பட்ட எண்ணங்களை மக்கள் நம்ப வேண்டும்? இதற்குப் பின்னர், துக்கமான ஒரு காரியமிருக்கிறது என நான் நம்புகிறேன்.

ஒரு போதகரின் மகனாக மார்ஷல் ஆப்பிள் ஒயிட் வளர்ந்தான். இவன் வயது வந்தபோது திருச்சபையின் பல பணிகளிலே ஈடுபட்டான். சபையின் பாடகர் குழுவின் தலைவரானான். திருமணம் முடிந்து 2 குழந்தைகளுக்குத் தகப்பனானான். இருந்தாலும் அவனை ஓரினச்சேர்க்கை இச்சை அதிகமாக வாட்டியது.

அவனுக்குள்ளே குற்ற உணர்வு, பயம், ஆக்கினைத்தீர்ப்பு போன்றவை, மனப் போராட்டத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அவன் மருத்துவர்களையும், ஆலோசகர் களையும் சந்தித்து ஆலோசனை பெற்றான். இந்த மிருக குணம் தன்னை ஆளுவதாகக் கூறினான். இதிலிருந்து விடுபடும்படி ஒருமுறை மருத்துவமனையில் சேர்ந்து பயிற்சியும் பெற்றான். இந்தப் பாவத்தை விட்டுவிட தன்னால் இயன்ற எல்லா வற்றையும் செய்து பார்த்தான். ஆனால் ஒன்றும் அவனுக்கு விடுதலை தரமுடிய வில்லை.

"ஜெயங்கொள்ளுகிறவர்கள்" என்ற ஒரு குழுவை, தனது குடும்பத்தை விட்டு விட்ட பல ஆண்டுகளுக்குப் பிறகு ஆப்பிள் ஒயிட் ஆரம்பித்தான். இந்தக்குழு உடலுறவு கொள்ளுவதைத் தவிர்த்தலைக் குறித்து போதித்து. இந்த போதனை அவர்களை விடுவிக்கும் என ஆப்பிள்ஒயிட் எண்ணி னான் ஆனால் அது நடக்கவில்லை. எனவே அவன் தனது ஆண்மையை இழக்க காயடித்துக் கொண்டான். அவனோடு தற்கொலை செய்த 38 பேரும் இதனைச் செய்தனர். இருந்தாலும் பாவத்தின் பிடியிலிருந்து அவர்களுக்கு விடுதலை இல்லை.

இன்று பாவமும், கொடிய பழக்க வழக்கங்களும், திருச்சபையை ஆட்டிப்படைக்கின்றன. அவர்களது கூக்குரல் என்னவென்றால், "நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" (ரோமர் 7:24) "... நான் வெறுக்கிறதை நான் செய்கிறேன்" (ரோமர் 7:15).

நாம் வேதத்தைப் படிக்க, படிக்க, பாவத்திலிருந்து விடுபட மனிதன் எடுக்கும் முயற்சி ஒன்றும் பலனளிப்பதில்லை என்பதை உணருகிறேன். நமது முயற்சிகளுக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்கும் வரை, அல்லது நமது மனதிலே தீர்மானம் எடுக்கும் வரை தேவன் நம் சொந்த இஷ்டத்திற்குக் விட்டுவிடுவார்.

இஸ்ரவேலர் மனித உதவியால் தங்கள் எதிரியை முறியடிக்க திட்டமிட்ட போது, அவர் அதனைக் கண்டித்தார். "எகிப்தியர் தெய்வம் அல்ல, மனுஷர்தானே, அவர்களுடைய குதிரைகள் ஆவியல்ல, மாம்சந்தானே; கர்த்தர் தமது கரத்தை நீட்டுவார், அப்பொழுது சகாயம் செய்கிறவனும் இடறி, சகாயம் பெறுகிற வனும் விழுந்து, அனைவரும் ஏகமாய் அழிந்து போவார்கள்" (ஏசாயா 31:3). அவரில் மாத்திரம்தான் வெற்றி உண்டு எனக் கர்த்தருடைய வார்த்தை மிகவும் தெளிவாகக் கூறியது. நமது விரோதிகளிடத்திலிருந்து நம்மை விடுவிக்க அவருக்கு மாத்திரம்தான் வல்லமை உண்டு.

உமக்கு நல்ல எண்ணம், நல்ல நடத்தை, மாசுபடாத உள்ளம் இருக்கலாம். கடவுள் பயம் மிகுந்த ஒருவராகவும் நீ இருக்கலாம். பாதாள சக்திகளை எதிர்த்து போரிடுகின்ற வேளைகளிலே, இதுவெல்லாம் ஒரு பொருட்டல்ல, உங்கள் எந்த மனித சக்திகளும், திறமைகளும் சாத்தானுக்கு விரோதமாக செயல்பட முடியாது. உங்கள் முயற்சிகளிலே நீங்கள் நிச்சயம் தோல்விதான் அடைவீர்கள்.

**"மனிதனின் பட்டயத்தால், நமது விரோதிகள் முறியடிக்கப்பட மாட்டார்கள்" – ஏசாயா தெளிவாக கூறுகிறார்:**

நீ போராட்டத்தின் மத்தியில் காணப்பட்டால், சகரியாவிற்கு தேவன் தந்த வாக்குத்தத்தத்தை நினைவு கூர வேண்டும். **"அப்பொழுது அவர் செருபாபேலுக்குச் சொல்லப்படுகிற கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்"** (சகரியா 4:6). "அப்பொழுது வீரனுடைய பட்டயம் அல்லாத பட்டயத்தாலே அசீரியன் விழுவான். நீசனுடைய பட்டயம் அல்லாத பட்டயமே அவனை பட்சிக்கும். அவன் பட்டயத்துக்குத் தப்ப ஓடுவான். அவன் வாலிபர் கலைந்துபோவார்கள்" (ஏசாயா 31:8). பட்டயம் நிச்சயம் அசீரியாவைத் தோற்கடிக்கும், ஆனால் அது எப்படிப்பட்ட பட்டயமாயிருக்கும்.

வெளிப்படுத்துதல் புத்தகத்திலே, தேவனின் பரிசுத்த பட்டயம் ஒன்றைக் குறித்து தேவன் கூறுகிறார். "புற ஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது. இரும்புக்கோலால் அவர்களை அரசாளுவார். அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார் (வெளிப்படுத்தல் 19:15). யோவான் இங்கு இயேசு கிறிஸ்துவைக் குறித்து குறிப்பிடுகிறார். ஊடுருவிச் செல்லும் வெற்றி மிகுந்த பட்டயம் தேவனின் வாயிலிருந்து வருமென யோவான் குறிப்பிடுகிறார்.

நமது போராட்டத்தில் நமக்குத் துணைபுரியும் ஆயுதம் எதுவென்றால், தேவனின் சத்தம். அசீரியர்களை தேவன் எப்படி மடங்கடிக்கப் போகிறார் என ஏசாயா கூறுவது இதற்கு ஒப்பாயிருக்கிறது. "அப்பொழுது தண்டாயுதத்தினால் அடித்த அசீரியன் கர்த்தருடைய சத்தத்தினாலே நொறுங்குண்டு போவான்" (ஏசாயா 30:31).

தேவன் உங்களுக்காக போராட விரும்புகிறார். அவர் தமது சத்தத்தை விளங்கப்பண்ணி உங்கள் எதிரியை விரட்டி அடிப்பார் என ஏசாயா கூறுகிறார். "**கர்த்தர்** மகத்துவமானவர்; தமது சத்தத்தை கேட்கப்பண்ணி, உக்கிர கோபத்தினாலும், பட்சிக்கிற அக்கினிஜுவாலையினாலும், இடி பெரு வெள்ளம், கல்மழையினாலும், தமது


**NEHEMIAH BIBLE COLLEGE,**
CHENNAI.

**WARDEN WANTED**

We need a **Hindi and English knowing Theologian** to work in our **Nehemiah Residential Bible College** as **Warden.** Salary, Boarding and Lodging will be provided.

Please contact:
**Pr. S. Sam Selva Raj,**
Cell : 98412 71858 / 98410 71858
E.Mail : sam@echoofhiscall.org

புயத்தின் வல்லமையைக் காண்பிப்பார்". (ஏசாயா30:30).

தேவனின் பாதுகாக்கும் வல்லமையை பறவைக்கு உவமைப்படுத்தி ஏசாயா கூறுகிறார், "பறந்து காக்கிற பட்சிகளைப்போல சேனைகளின் **கர்த்தர்** எருசலேமின்மேல் ஆதரவாக இருப்பார்; அவர் அதைக் காத்துத் தப்பப்பண்ணுவார்; அவர் கடந்துவந்து அதை விடுவிப்பார்" (ஏசாயா 31:5). இந்த வசனத்தின் நேரடி மொழிபெயர்ப்பு என்னவெனில், எப்படி அடைகாக்கின்ற பறவை தனது குஞ்சுகளின் மீது தனது செட்டைகளை விரித்து காக்கிறதோ, தேவன் அவ்விதம் எருசலேமைப் பாதுகாப்பார்.

கர்த்தர், இஸ்ரவேலைப் பார்த்து கூறியதாவது. "நீங்கள்" எதிரியின் தாக்குதலிலிருந்து காப்பாற்றப்பட வேண்டுமா? எனது செட்டையின் கீழ் அடைக்கலம் புகுங்கள். நான் உங்களை பாதுகாப்பேன். கோழி தன் செட்டைகளின் கீழ் தனது குஞ்சுகளை மறைத்து வைப்பதைப் போல் மறைத்து வைப்பேன். உங்கள் சத்துருவைக் குறித்து நீங்கள் பயந்து பயந்து வாழவேண்டிய அவசியமில்லை.

நீங்கள் இப்போது பெரிய போராட்டத்தில் காணப்படுகின்றீர்களா? உங்களால் மேற்கொள்ள முடியாத எதிராளியை நீங்கள் சந்திக்கின்றீர்களா? அப்படியென்றால், நீங்கள் எப்படி தூய்மையாகவும், உண்மையாகவும், கிறிஸ்துவைப் போன்று காணப்பட முடியும்? சாத்தான் கெர்ச்சிக்கின்ற சிங்கம் போல வருகின்ற வேளையில், உங்களுக்கு இச்சையின் மீதும், சோதனைகள் மீதும், எப்படி வெற்றி கிடைக்கும்?

உனது பட்டயத்தைக் கீழே போடு! நீ என்னை விசுவாசி, அவர் உனக்காகப் போராடுவார். "இனி இது என்னுடைய போராட்டம் அல்ல, நான் இதிலே பலமுறை தவறிவிட்டேன், தேவனே எனக்கு உதவிபுரியும். இப்படிப்பட்ட பெரிய எதிராளிகளிடத்திலிருந்து எனக்கு விடுதலை தாரும்" என்று நீ கூறுகிற நேரத்தை தேவன் எதிர்பார்க்கின்றார்.

## இஸ்ரவேலர் நினைக்கின்ற வண்ணம் செயல்பட தேவன் அனுமதித்தார் – ஆனால் அவர்கள் வெற்றிபெறமுடியவில்லை

இஸ்ரவேலர் கேட்ட உதவியை எகிப்து செய்யவேயில்லை. ஒரு காலம் பலத்த சக்தி வாய்ந்ததாய் காணப்பட்ட எகிப்து, இப்போது முறிந்துபோன நாணலைப்போலாயிற்று. அதற்குள் செனகரீப்பும், அசீரியப் படையும் எருசலேமை சூழ்ந்துகொண்டன. இந்த வேளையில்தான் இனி நாம் நமது மாம்ச பெலத்தில் நிற்பதில்லை, தேவனின் சித்தப்படி செயல்படுவோம் என்ற முடிவுக்கு எசேக்கியா வருகிறார்.

இராஜா தன்னைத் தாழ்த்தி, தேவனை ஜெபத்தின் மூலம் தேடுகிறார். "இராஜாவாகிய எசேக்கியா அதைக் கேட்டபோது, தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டு உடுத்திக் கொண்டு, கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசித்து" (ஏசாயா 37:1) அறிக்கையிட்டு கூறியதாவது, "ஆண்டவரே, உமக்குத் தர என்னிடம் எதுவும் இல்லை. விசுவாசம் மட்டும்தான் என்னிடமுண்டு. என்னால் சனகரீப்புடன் யுத்தம் செய்ய இயலாது. என்னைச் சுற்றிலும் எதிராளியுள்ளான், தயவுகூர்ந்து உமது வழிநடத்துதலைத் தாரும்".

தேவனின் வழிநடத்துதல் நிச்சயம் தனக்கு வரும் என்பதை எசேக்கியா அறிவார். எனவே இப்போது தனது தூதுவனைத் தீர்க்கதரிசியிடம் அனுப்புகிறார். இந்த மனிதர் ஏசாயாவைப் பார்த்து, "இந்த நாள் நெருக்கமும், கண்டிதமும், தூஷணமும் அனுபவிக்கிற நாள்; பிள்ளைப்பேறு நோக்கியிருக்கிறது; பெறவோ பெலன் இல்லை" (ஏசாயா 37:3). இந்த முறை நாங்கள் கடவுள் எண்ணுகிற விதமாகத்தான் செயல்பட வேண்டுமென விரும்புகிறோம். நாங்கள் முற்றிலும் பெலவீனமாய்க் காணப்படுகின்றோம். எங்களது கோட்டை முற்றும் பெலனிழந்து விட்டது. நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

"அப்பொழுது ஏசாயா அவர்களை நோக்கி: அசீரியா ராஜாவைக்குறித்து, அவன் இந்த நகரத்துக்குள் ராஜாவின் ஊழியக்காரர் என்னைத் தூஷித்ததும் நீர் கேட்டதுமான வார்த்தைகளினாலே பயப்படாதேயும். இதோ அவன் ஒரு செய்தியைக் கேட்டு, தன் தேசத்திற்குத் திரும்புவதற்கான ஆவியை நான் அவனுக்குள் அனுப்பி, அவனை அவன் தேசத்திலே பட்டயத்தால் விழப்பண்ணுவேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்பதை உங்கள் ஆண்டவனிடத்தில் சொல்லுங்கள் என்றான்" (ஏசாயா37:6-7). தேவன் சொன்னார், "உங்களது எதிராளி இப்போது எனது எதிராளி, யாராவது உங்களை அவமதித்தால் அவர்கள் என்னை அவமதிக்கின்றனர். எனவே அந்த எதிராளியை நான் இனி பார்த்துக் கொள்கிறேன்".

"ஆகையால் கர்த்தர் அசீரியா ராஜாவைக்குறித்து; அவன் இந்த நகரத்துக்குள் பிரவேசிப்பதில்லை; இதின்மேல் அம்பு எய்வதுமில்லை. இதற்கு முன்பாகக் கேடகத்தோடே வருவதுமில்லை; இதற்கு எதிராகக் கொத்தளம் போடுவதுமில்லை." (ஏசாயா 37:33). மற்றவர்கள் உங்களைச் சுற்றி எழலாம். நீங்கள் என் உடன்படிக்கையின்படி நடப்பதால், உங்களை எதிர்க்கும் எல்லா சத்துருக்களையும் நான் எதிர்க்கின்றேன்.

தேவன் ஒரே ஒரு தூதனை மாத்திரம் அனுப்பி முழு அசீரியப் படையுடனும் போர்புரிந்தார். வேதம் கூறுகிறது. "அப்பொழுது கர்த்தருடைய தூதன் புறப்பட்டு அசீரியரின் பாளயத்தில் லட்சத்தெண்பத்தையாயிரம் பேரைச்

**எங்கள் சகோதர, சகோதரிகளுக்கு அன்பின் வேண்டுகோள்**

நீங்கள் அறிந்தபடி நம் ஊழியங்களுக்குரிய ஊழியர் உதவிகள், அச்சுக் காகிதங்கள், பிரயாணங்கள், அலுவலகச் செலவுகள் போன்ற மிக முக்கியமான அடிப்படைத் தேவைகளை சந்திக்க, நம்மிடம் பணம் இல்லாமல், இதுவரை இல்லாத அளவுக்கு மிகவும் நெருக்கப்படுகிறோம். பொதுவாக நாம் யாரிடமும் நம் பொருளாதாரத் தேவைகளைக் கேட்பதில்லை. எனவே, இந்த ஊழியங்களை உண்மையாய் நேசிக்கிறவர்கள், உங்களால் இயன்ற காணிக்கைகளை மணி ஆர்டர், காசோலை, டிமாண்ட் டிராப்ட், NEFT, Paypal, PhonePe, Gpay (98410 71858) போன்ற ஏதாவது வழிகளில் அனுப்பி உதவ வேண்டுகிறோம். அனுப்பும்போது எங்களுக்குத் தகவல் தெரிவியுங்கள். ஏற்கனவே உதவிசெய்து வருபவர்களுக்கு நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

**"...இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான்".**
**நீதிமொழிகள் 17:17**

**- ஆசிரியர், அழைப்பின் எதிரொலி**
98412 71858
E.mail : sam@echoofhiscall.org

சங்கரித்தான். அதிகாலமே எழுந்திருக்கும் போது, இதோ, அவர்களெல்லாரும் செத்த பிரேதங்களாய்க் கிடந்தார்கள்" (ஏசாயா 37:36).

என்ன விந்தைக் காட்சி; அந்த நாள் காலையிலே 1,85,000 அசீரியா சேனை வீரர்கள் சங்கரிக்கப்பட்டனர். ஒருவர் மீதும் எந்தக் காயமும் காணப்படவில்லை. இஸ்ரவேலர் தங்களைத் தாழ்த்தி, தேவனைத் தேடியதால் இது நடைபெற்றது.

அசீரியர் உடனே புறமுதுகு காட்டி அசீரியாவை நோக்கி ஓடினர், என வேதம் கூறுகிறது. "அப்பொழுது அசீரியா ராஜாவாகிய சனகெரீப் பிரயாணப்பட்டுத் திரும்பிப்போய், நினிவேயில் இருந்துவிட்டான்" (ஏசாயா 37:37). இஸ்ரவேலரின் சத்துரு சிதறடிக்கப்பட்டது மட்டுமல்ல அவர்கள் நாசமாக்கப்பட்டனர். செனகரீப் அவனது இரண்டு பிள்ளைகளால், அவன் தன் தேவனை ஆராதித்துக் கொண்டிருக்கும் போது கொல்லப்பட்டான்.

தேவன் நமது மாம்ச இச்சைகளிலிருந்து எப்படி வெற்றி தருவார் என்பது எவ்வளவு அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது. எதிராளி நம்மீது பலத்த அம்புகளை எய்யலாம். ஆனால் அவை நம்மைத் தாக்க முடியாது. இச்சையிலும், சோதனையிலும் அவன் நம்மைத்தாக்கினாலும் அவன் ஓட வேண்டியதுதான் வரும். நம் அனைவரையும் பாதுகாப்பதாக தேவன் உறுதியளித்துள்ளார்.

அன்பு பரிசுத்தவான்களே, தேவன் கூறுகிறார், "உனது போராட்டத்தின் மத்தியில் என்னைப் பற்றிக்கொள். தேவனுடைய வல்லமையில் நீ விசுவாசம் வைத்தால் வெற்றி உனதே. சத்துரு உன்னை மேற்கொள்கையில் என்னை உன் முழுமனதால் தேடு. உனக்காக நான் யுத்தம் செய்வேன்".

அன்பானவர்களே, யுத்தம் கர்த்தருடையது. தேவனின் வாக்குத் தத்தத்தில் நம்பிக்கை வைத்தால், அவர் நம்மை வழுவாது பார்த்துக் கொள்வார். **அதுவே பூரண விடுதலைக்கு சிறந்த வழி.** ஆமென்.


## We Need Used Library Books

We need **used Library Books** which are **general in nature such as Story Books, Dictions, Novels, Fables, Dictionaries, Puzzles, Word Twister, Dramas, Fiction.** etc., for the use of poor children in our school Please Contact :

**Pr. S. Sam Selva Raj,**
Echo of His Call,
Cell : 98412 71858 / 98410 71858
E.mail : sam@echoofhiscall.org

## வருமான வரிச்சட்டம்

இந்தியா வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்குக் கல்வி, மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி அறக்கட்டளை"க்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) **"Echo of His Call Educational Trust"** என்ற பெயருக்கு எடுத்து அனுப்புங்கள். மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 \| SWIFT Code : SBI NIN BB 455 |

# நெகேமியா வேதாகமக் கல்லூரிகள், (Estd.:1992) சென்னை

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள் (Estd.:1969)

**மாலை நேர வகுப்புகள் – சேப்பாக்கம் மற்றும் சந்தோஷபுரம் – இறையியல் டிப்ளோமா**

(Diploma in Theology) (திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன் மாலை 6.30 மணி முதல் 8.30 மணி வரை)

**கல்வித் தகுதி** 10–ம் வகுப்பு மற்றும் அதற்குமேல் **போதனா மொழி :** தமிழ்

**ஆரம்பநாள் : 01-06-2021**

**முழு நேர வகுப்புகள் – வேளச்சேரி இறையியல் டிப்ளோமா**

**Diploma in Theology பயிற்சிக் காலத்தில்** களப்பயிற்சிகளும், நிர்வாகப் பயிற்சிகளும் உண்டு **கல்வித் தகுதி :** 10–ம் வகுப்பு மற்றும் அதற்குமேல். **போதனா மொழி :** இந்தி மற்றும் ஆங்கிலம்

**உடனே அணுகவும் : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்,**
நெகேமியா வேதாகமக் கல்லூரிகள், **அழைப்பின் எதிரொலி,**
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
போன்: (+91–44) 2852 8282, 2852 9293 செல்: (+91) 98410 71852, 95661 31858

E-mail: sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in Websites: www.echoofhiscall.org / www.echoofhiscall.com



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

**வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)**

**உங்களுக்கு எதிராக வரும் எதிர்ப்புகளை வாய்ப்புகளாக மாற்ற தேவனால் கூடும்!**

1971 ஆம் ஆண்டிலிருந்து நமது தலைமைச் சபைக்கு அருகிலுள்ள மெரீனா கடற்கரைப்பகுதியில் தனியாக காற்று வாங்க அமர்ந்திருக்கும் மக்களிடம் சுவிசேஷக் கைப்பிரதிகளைக் கொடுத்தும், அவர்களோடு தனிப்பட்ட முறையில் பேசியும், அவர்களது பிரச்சினைகளுக்காக ஜெபித்தும் வருவது எனது பழக்கமாக இருந்தது. இதன் மூலமாக அநேக மக்களை நமது ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் கிருபையால் இரட்சிப்புக்குள்ளாகக் கொண்டுவர தேவன் எனக்கு உதவி செய்தார். இந்த முயற்சியால் எனக்குக் கிடைத்து வரும் வெற்றியைப் பொறுக்க மாட்டாத ஒரு சிலர் எனக்கு எதிராக எழும்பி, என் பின்னே வந்து, என்னை பயமுறுத்தி, எனக்கு மன உளைச்சலைத் தந்தார்கள். அநேக இரவுகள் பயத்துடனும், ஓய்வு எடுக்க முடியாமலும் கழிந்தன. நான் பலரையும் மனச்சோர்விலிருந்தும், தற்கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்திலிருந்தும் காப்பாற்றினேன் என்பதை அந்த எதிராளிகளால் புரிந்துகொள்ள முடியவில்லை. நான் அம்மக்களை கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றினேன் என்று மட்டும் அவர்கள் எண்ணினார்கள்.

ஒரு மாலை வேளையில், நிம்மதியின்றி மனச்சோர்வினால் பாதிக்கப்பட்ட மக்களைத் தேடி நான் போய்க்கொண்டிருக்கையில், அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்ட ஒரு வாலிபனை ஒரு கூட்டம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததைக் கவனித்தேன். அவன் அங்குமிங்குமாக ஓடி மக்களைத் தாக்க முயன்று இறுதியில் கீழே விழுந்து, வலிப்பு நோய் வந்தவனைப் போல துடித்துக் கொண்டிருந்தான். அந்த வேடிக்கைக் பார்த்த கூட்டத்தில் நானும் ஒருவனாகத்தான் நின்று கொண்டிருந்தேன். நான் சுவிசேஷம் சொல்ல தடையாய் இருந்த ஒரு சிலரும் அந்த கூட்டத்திற்குள் நின்று கொண்டிருந்தனர்.

திடீரென்று பரிசுத்த ஆவியானவர் எனக்குள் வந்து, தெளிவாய் என்னிடம் இவ்வாறு பேசினார்: “என் மகனே, இந்த வாலிபனை என் நாமத்தினாலே சுகப்படுத்தி, என் நாமத்தை நீ மகிமைப்படுத்த சரியான தருணம் இதுதான்.” உடனே எனக்குள் மெய்யாகவே ஒரு தேவபெலன் வந்தது. துடித்துக் கொண்டிருந்த அந்த வாலிபனை நெருங்கினேன். அங்கு கூடியிருந்த மக்கள் என்னை வித்தியாசமாகப் பார்த்தார்கள். அப்பொழுது நான், என் கையை அவன் தலைமேல் வைத்து, அவன் சரீரத்தை ஆட்கொண்டிருந்த பிசாசை, ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வெளியே போகும்படிக்குக் கட்டளையிட்டேன்.

உடனடியாக அவன் சுகமடைந்து, எழுந்திருந்து இவ்வாறு அமைதியான குரலில், “நான் எங்கேயிருக்கிறேன்? நீங்களெல்லாரும் யார்? என் பள்ளி நாட்கள் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. என் கிராமத்தில் நான் பள்ளிக்குப் போய்வந்தேனே. என் புத்தகங்களும், பையும் எங்கே? என் பள்ளி எங்கே? என்று பேச ஆரம்பித்தான். சில வருடங்களுக்கு முன் அவன் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தபோது அசுத்த ஆவி ஒன்று அவனைப் பிடித்துக்கொண்டு அவனைப் பாடுபடுத்தி வந்ததை அவன் பேச்சு தெளிவுபடுத்தியது. ஆனால் நல்ல செய்தி என்னவென்றால், இப்பொழுது அந்த அசுத்த ஆவியின் பிடியிலிருந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையினாலே அவன் விடுபட்டுவிட்டான்! இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டான். எத்தகைய அருமையான தேவனை நாம் கொண்டுள்ளோம்!

அந்த நாள் முதல், என்னை எதிர்த்து என்னை வெறுத்த மக்கள் என்னைப் பார்க்கும்போது வணக்கம் செலுத்தி, என் நண்பர்களாக மாறினார்கள்! அவர்களில் சிலர் இயேசு கிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, என்னோடு இணைந்து ஊழியம் செய்யத் தொடங்கினார்கள். இயேசு கிறிஸ்துவைக் குறித்து அறிவிக்கவே முடியாது என்ற நிலையில் இருந்த எங்கள் பகுதியில் அவரது ஊழியத்தை ஸ்தாபிக்க தேவன் எனக்கு உதவினார்.

அருமை வாசகரே, உங்கள் ஊழிய ஸ்தலத்திலோ, குடும்பத்திலோ, வேலை ஸ்தலத்திலோ நீங்கள் எதிர்ப்புகளை சந்தித்து வருகிறீர்களா? அதனால் சோர்ந்துபோயிருக்கிறீர்களா? பயத்தினால் உறங்க முடியாத இரவுகளை சந்தித்து வருகிறீர்களா? நீங்கள் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாயிருந்தால், அவரும் உங்களுக்கு உண்மையுள்ளவராயிருப்பார். உங்களைப் போல பெலவீனமான மக்களைத்தான் தைரியமுள்ள மக்களாக மாற்ற தேவன் காத்துக் கொண்டிருக்கிறார். நானும் பயந்த சுபாவமுள்ளவன்தான். ஆனால் தேவன் என்னை பெலப்படுத்தி, ஊழியத்தில் எத்தகைய சவால்களையும் சந்திக்க என்னை தைரியப்படுத்தியுள்ளார். உங்களுக்கும் தேவன் தமது கிருபையை அருள நான் ஜெபிக்கிறேன்.

**உங்கள் துக்கமயமான சூழ்நிலைகள் சந்தோஷமான சூழ்நிலைகளாக மாறும்!**

**எவன் ஞானமுள்ளவனோ அவன் இவைகளைக் கவனிக்கக்கடவன் சங்கீதம் 107 : 43.**

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், சமூக சேவைகள்**

**வருட சந்தா ரூ. 100/–** **ஆயுள் சந்தா ரூ. 2000/–**

அழைப்பின் எதிரொலி ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், தேவ பிள்ளைகளாகிய நீங்கள் விரும்பி அளிக்கும் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் தங்களை ஏவும் விதத்தில் தாங்கள் **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களைத் தாங்குங்கள். சுவிசேஷம் சென்றடையாத இடங்கள் மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்குத் தேவை.

உங்கள் விலாசம் மாறினால் உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். அழைப்பின் எதிரொலி பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

நம் அழைப்பின் எதிரொலி பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) மூலம் Echo of His Call என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது அழைப்பின் எதிரொலி பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதரரே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.**
1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293 செல்: (+91) 98410 71852
E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in
Websites : www.echoofhiscall.org / www.echoofhiscall.com

**YOU CAN SEND YOUR DONATIONS ON ONLINE ALSO**

# ஓர் அவசர நற்செய்தி!



முழுநேர வேதாகமக் கல்லூரியில்
படிக்க முடியாதவர்களுக்கு



## ஓர் அரிய வாய்ப்பு!!

**நமது**
**நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்**
**மறுபடியும் சென்னையில்**
**திறக்கப்படவுள்ளன!!!**

**ஆரம்ப நாள் : 01-06-2021**

## மாலை நேர தமிழ் வழிக் கல்வி

**(2 இடங்கள்)**

1. **நெகேமியா வேதாகமக் கல்லூரி,**
   அழைப்பின் எதிரொலி, 10, முகமது அப்துல்லா 2 வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
2. **ST. பால்ஸ் பள்ளி வளாகம்,**
   8/18, வேளச்சேரி மெயின் ரோடு,
   சந்தோஷபுரம் - விஜயநகரம் பஸ் நிறுத்தம்,
   மேடவாக்கம், சென்னை-600 100.

**ஹிந்தி மற்றும் ஆங்கில வழி முழுநேரக் கல்வி**
**நெகேமியா வேதாகமக் கல்லூரி,**
வேளச்சேரி இரயில் நிலையம் எதிரில்,
சென்னை-600 100.

உடனே தொடர்பு கொள்க :
பாஸ்டர் **அலெக்ஸ் சாம்சன் சாம்,** இயக்குநர்
Cell : 98412 71858 / 98410 71858. E.mail : sam@echoofhiscall.org

**உங்கள் உற்சாகக் காணிக்கைகளை கீழ்க்காணும் வங்கிகள் மூலம் அனுப்பி அதன் விபரத்தை எங்களுக்கு தெரியப்படுத்தவும்:**

| Bank | Branch | Name | IFSC Code No. | Account Number |
|---|---|---|---|---|
| 1. STATE BANK OF INDIA | Triplicane, Chennai -5 | S. Sam Selva Raj | SBIN 0000249 | 102329 34679 |
| 2. ICICI BANK | Anna Salai, Chennai -2 | Echo of His Call | ICIC 0006038 | 6038 05022319 |

Regd. with the RNI No. 67380/93
Licenced to post without pre-payment
Postal Regn. No. TN/CH © /197/21-23
Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23
Date of Publication: last week of previous month
Date of Posting : 27th & 28th of previous month
Posted at "Egmore RMS / 1 Patrika Channel"
on 29th MARCH 2021

If un-delivered please return to:
**ECHO OF HIS CALL (TAMIL)**
P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.
Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766

*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from 18, Mohammed Abdullah Sahib Street, Chepauk, Chennai-600 005 and printed by him at **Echo of His Call Printers** 18, Mohammed Abdullah Sahib Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**